# கிறிஸ்துவைப் பிரசங்கித்தல் என்பதன் பொருள் என்ன? (8:5, 12)

*அப். 8:5ல் நாம், ''அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர் களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்'' என்று படிக்கின்றோம்.* Syngman[1] Rhee - *சிங்மென் ரீ அவர்கள் ஒரு முறை,"கிறிஸ்துவைப் பிரசங்கிக்க தேவபக்தியுள்ள மனிதர் களேயன்றி, வேறொன்றும் கொரியாவுக்குத் தேவையில்லை" என்று கூறினார், என்று பர்ட்டன் காஃப்மேன் விளக்கமளிக் கிறார். இத்துடன் நாம், ''உலகத்திற்கும் இதுவேயன்றி வேறொன்றும் தேவையில்லை"[2] என்று சேர்த்துக் கொள்ளலாம். "கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தல்" என்பதன் பொருள் என்ன? சபையின் அறிக்கைகளில் "நாங்கள் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்" என்ற வார்த்தைகள் அடிக்கடி வெளியிடப் படுகின்றன, ஆனால் சொல்வது ஒன்றாகவும் செய்வது வேறொன்றாகவும் உள்ளது.*

*பிலிப்பு மற்றும் சமாரியர்களைப் பற்றிய இந்நிகழ்ச்சியானது ''கிறிஸ்துவைப் பிரசங்கித்தல்'' என்பது உண்மையில் எதைக் குறிக்கிறது என்பதை நமக்கு வெளிச்சம் போட்டுக் காண்பிக்கிறது.*

## *கிறிஸ்துவின் நபர்த்துவம் (8:5)*

*சமாரியர்களுக்குக் "கிறிஸ்துவைப் பிரசங்கித்த'' போது, ஏவப்பட்ட மற்ற பிரசங்கியார்கள் செய்தது போலவே பிலிப்புவும், கிறிஸ்துவைப் பற்றிய மாபெரும் சத்தியங்களைப் பிரசங்கித்திருப்பார் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை; இயேசு தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார் என்ற உண்மை (2:16; 8:35), அவரது வாழ்க்கை மற்றும் அற்புதங்கள் பற்றிய*

விபரங்கள் (2:22; 10:38), அவர்களுக்காக அவர் சிலுவையில் மரணமடைந்தது (2:23; 8:32; 10:39), மரித்தோரிலிருந்து அவரது உயிர்த்தெழுதல் (2:32; 10:40), பரலோகத்தில் தேவனுடைய வலது பாரிசத்திற்கு அவர் ஏறிச் சென்றது, மற்றும் பரலோகத் திலிருந்து அவர் ஆளுகை செய்வது (2:30-36), மற்றும் வாக்குத் தத்தம் செய்யப்பட்ட அவருடைய மறுவருகை (10:42). இந்த சத்தியங்களே பிலிப்புவின் பிரசங்கத்திற்கு அஸ்திபாரமாகவும், மையக் கருத்தாகவும் இருந்திருக்க வேண்டும். ஆயினும் "கிறிஸ் துவைப் பிரசங்கிப்பது" என்பதில் இவைகளைக் காட்டிலும் இன்னும் அதிகமானவை அடங்கியுள்ளன.

## கிறிஸ்துவின் இராஜ்யம் (8:12)

வசனம் 12ல், "தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் [சமாரியர்கள்] விசுவாசித்த போது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்" என்றுள்ளது. "கிறிஸ்துவைப் பிரசங்கித்தல்" என்பது இயேசுவைப் பற்றிய மாபெரும் அடிப்படைச் சத்தியங்களைப் பிரசங்கிப்பதுடன் இன்னும் அதிகமானவைகளை உள்ளடக்கி யிருக்கிறது என்பதை வசனம் 12 தெளிவாக்குகிறது.

ஜான் A. ரெட்ஹெட் அவர்கள், "தேவனை அறியப் பெறுதல்" என்ற தமது நூலில், நமது மார்க்கக் கருத்துக்கள் பெரும்பாலும் நடைமுறையற்றவைகளாயுள்ளன - தேவனுக் குள் உள்ள நமது விசுவாசத்தைக் கையாள நமக்குச் சில "கைப் பிடிகள்" தேவை என்று சுட்டிக்காட்டினார். கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிப்பதிலும் இது உண்மையாயுள்ளது. நீங்களும் நானும் "கிறிஸ்துவைப் பிரசங்கிக்க" வேண்டுமென்றால் மக்கள் பிடித்துக் கொள்ளும்படி நாம் சில "கைப்பிடிகளை" அவர் களுக்கு கொடுக்க வேண்டியது அவசியமாகும். இயேசுவைப் பற்றிய உண்மைகளை மக்களிடம் கூறி, அவைகளிலிருந்து அவர்கள் பயன்பெறுவது எப்படி என்பதைக் கூறாமல் விடுவதென்பது, ஒரு மனிதரிடம் சிக்கலான கருவி ஒன்றைக் கொடுத்து, அதைப் பயன்படுத்துவது எப்படி என்று கூறாமல் விட்டுவிடுவதைப் போன்றதாகும். பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு வியாபாரி, அமெரிக்க நாட்டின் தனியாக விடப்பட்ட பகுதி

ஒன்றுக்குச் சென்று ஒரு குளிர்பதனப் பெட்டியை, இதற்கு முன் அதைப் பார்த்தேயிராத பெரியவர் ஒருவருக்கு விற்றார். பின்பு ஒரு நாள் அவ்வியாபாரி அவரிடம் வந்து, "உங்கள் புதிய குளிர்பதனப் பெட்டி நீங்கள் விரும்பும் வகையில் உள்ளதா?" என்று கேட்டார். அதற்கு அப்பெரியவர், "அதை நான் மிக நன்றாக விரும்புகின்றேன், ஆனால் அம்மாதான் அதில் உள்ள பனிக்கட்டித் தட்டில் வைக்கப் பொருத்தமான அளவில் பனிக்கட்டித் துண்டுகளை வெட்டுவதற்குள் அதிகக் களைப் படைகிறார்கள்" என்று பதில் அளித்தார். புதிய உபயோகப் பொருட்களைப் போலவே, சத்தியமும் விளக்கமளிக்கப்பட்டு - நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது தேவையாய் உள்ளது.

பிலிப்பு "கிறிஸ்துவைப் பிரசங்கித்த" போது அவரது பிரசங்கம் நடைமுறைக்கேற்றதாய் இருந்தது. பிலிப்பு "கிறிஸ்துவைப் பிரசங்கித்த" போது அவர் தேவனுடைய ராஜ்யத்தைப் பிரசங்கித்தார் என்று வசனம் 12 கூறுகிறது. அதிகாரம் 1க்குப் பிறகு இங்குதான் "இராஜ்யம்" என்ற சொற்றொடர் முதன்முறையாகப் பயன்படுத்தப்படுவதை நாம் காண்கிறோம். நடபடிகள் 1 இதழில், "இவையாவும் எதைப் பற்றியது?" என்ற பிரசங்கத்தில், இயேசு நிறுவவிருந்த அமைப்பின் அடிப்படைச் சொற்றொடராக நற்செய்தி நூல்களில் "இராஜ்யம்" என்பது பயன்படுத்தப்பட்டதென்று நாம் கவனித்தோம், இதற்கு நடபடிகள் நூலில் "சபை" என்ற வார்த்தை அடிப்படைச் சொற்றொடராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதிகாரம் 2ல் ராஜ்யம்/சபை என்பது நிறுவப்பட்டதிலிருந்து இதுவரையிலும் நாம் "சபையைப்" பற்றிப் படித்திருக்கிறோம் (5:11; 8:1, 3). ஆனால் ராஜ்யம் என்று எவ்விடத்திலும் படிக்கவில்லை. பிலிப்பு, "ராஜ்யம்" என்ற சொற்றொடரை ஏன் பயன்படுத்தினார்? ஏனென்றால், சமாரியர்களும் (அவர்களின் அயலகத்தாரான யூதர்களிடம் கேட்டறிந்தபடி) மேசியா வரும்போது ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்துவார் என்று எதிர்பார்த்திருந்தனர் (யோவா. 4:25).[3]

"தேவனுடைய ராஜ்யம்" என்ற சொற்றொடரானது "தேவனுடைய சட்டம்" என்ற மூலப்பொருள் உடையதாயிருக்கிறது. இது பூமியிலோ (சபைக்கு ஒரு விசேஷித்த குறிப்புடன்[4]) அல்லது பரலோகத்திலோ (யாக். 2:5) இருக்கலாம். இவ்வசனப்பகுதியில் காணப்படும் சந்தர்ப்பப் பொருளின்படி,

*பிலிப்பும், சபையையே வலியுறுத்தினார் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. சபையைப்பற்றிப் பிரசங்கிக்காமல், ஒருவர் முழுமையாக "கிறிஸ்துவைப் பிரசங்கிக்க முடியாது, ஏனெனில் சபையைக் கட்டியவர் கிறிஸ்து" (மத். 16:18), சபைக்காக மரித்தவர் கிறிஸ்து (அப். 20:28), சபைக்குத் தலையானவர் கிறிஸ்து (எபே. 1:22, 23), மற்றும் சபையை நிலைநிறுத்துகிற வரும், சபையின் இரட்சகரும் கிறிஸ்துவே ஆவார் (எபே. 5:23-25)!*

*"தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிய நற்செய்தியை" அல்லது சபையை பிலிப்பு பிரசங்கித்தபோது, அவர் என்ன கூறியிருந்திருக்கலாம்? இராஜ்யம்/சபையானது நிறுவப் பட்டிருந்தது என்ற நற்செய்தியை அவர் பகிர்ந்து கொண்டிருந் திருப்பார். சபையில் நிலவிய ஐக்கியத்தை அவர் கூறி யிருந்திருப்பார். தேவனை ஆராதித்து ஊழியம் செய்யவும், மற்றவைகளுக்காகவும் சபை உறுப்பினர்கள் எவ்விதம் கூடிவர வேண்டும் என்று அவர் விளக்கமளித்திருந்திருப்பார்.*

## *கிறிஸ்துவின் நாமம் (8:12)*

*"கிறிஸ்துவைப் பிரசங்கித்த" போது பிலிப்பு "இயேசு கிறிஸ்துவின் நாமத்தை" ப் பற்றியும் பிரசங்கித்தார். அதிகாரம் 3 மற்றும் 4 பற்றிய நமது பாடத்தில், இயேசுவின் நாமமே அவருக்கு எல்லாமாக நிலைநிற்கிறதென்று நாம் வலியுறுத்தி னோம். மக்கள் அவருடைய பரிசுத்த நாமத்தினாலே ஞானஸ் நானம் பெற்றார்கள் (2:38). அப்போஸ்தலர்கள், இயேசுவின் நாமத்தினாலே குணப்படுத்தினார்கள் (3:16). விரைவிலேயே சீஷர்கள் அவருடைய நாமத்தைப் பெருமையுடன் அணிந்து கொண்டார்கள் (11:26; 26:28). ஒருமுறை ஒரு பிரசங்கியார், "ஒரு பெயரில் எதுவும் கிடையாது!" என்று அறிவித்தார். உடனே, கூட்டத்திலிருந்த ஒரு மனிதர், "பெயல்செபூலுக்கே மகிமை!" என்று உரக்கக் கூறினார். அம்மனிதர் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி "பெயரில் ஏதோ ஒன்று உள்ளது!" என்று உணரச் செய்தார். ஆப்பிரிக்கா நாட்டில் சபை கூடிவரும் இடம் ஒன்றில், மக்கள் யாவரும் பார்க்கும்படியான ஒரு இடத்தில் இரண்டு வசனங்கள் எழுதப்பட்டன: "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்"; "நாம் இரட்சிக்கப்படும்படிக்கு*

வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (ரோமர் 16:16; அப். 4:12). "கிறிஸ்துவைப் பிரசங்கிக்க" வேண்டுமென்றால், நாம் அவரது நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும்.

## இரட்சிப்புக்கான கிறிஸ்துவின் நிபந்தனைகள் *(8:12)*

சமாரியர்களுக்கு ''கிறிஸ்துவைப் பிரசங்கித்த'' போது பிலிப்பு நிறைவாக ஞானஸ்நானத்தைப் பற்றி அவர்களுக்குப் பிரசங்கித்தார். "கிறிஸ்துவை அறிவித்தலில்" ஞானஸ்நானம் அடங்கியிராமல் போயிருந்தால், சமாரியர்கள், தாங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதை அறிந்திருக்க மாட்டார்கள். கடந்த காலத்தில், "கிறிஸ்துவைப் பிரசங்கித்தலில்" ஞானஸ்நானத்தைப் பற்றிப் பிரசங்கித்தலும் அடங்கியுள்ளது என்பதைக் காட்ட பிரசங்கியார்கள் ஒரு காட்சி விளக்கத்தை அடிக்கடி பயன்படுத்தினார்கள். பிரசங்கியார் தமது உரையைக் கேட்பவர்களிடம் "இங்கிருக்கும் சிறுவர்களில் ஒருவனிடம் நான் சில விஷயங்கள் கூறப்போகிறேன்" என்பார். அவர் ஒரு சிறு பையனை கூட்டத்தின் முன்பாக அழைத்து அவன் காதுகளில் இரகசியமாக ஏதோ சொல்லுவார். அந்தப் பையன் வெளியே ஓடிச் சென்று, ஒரு சிறு கல்லுடன் திரும்பி வருவான். பிரசங்கியார் தமது உரையைக் கேட்பவர்களிடம், "நான் அவனிடத்தில் என்ன கூறினேன் என்று நினைக்கிறீர்கள்?'' என்று கேட்பார். பலர் அதற்கு, ''நீங்கள் அவனிடத்தில் வெளியே சென்று ஒரு கல்லை எடுத்து வரும்படி கூறினீர்கள்'' என்று அங்குள்ள பலர் பதில் அளிப்பார்கள். தொடர்ந்து பிரசங்கியார், "நான் அவனிடத்தில் அப்படிக் கூறினேன் என்று நீங்கள் நினைப்பது ஏன்?" என்பார். அதற்கு அவர்கள், "ஏனென்றால் அவன் அதைத்தானே செய்தான்'' என்பார்கள். பிரசங்கியார் ஒரு புன்சிரிப்புடன், ''ஆம், சமாரியர்கள் செய்ததைக் காணும்போது, பிலிப்பு அவர்களிடம் என்ன செய்யும்படி கூறினார் என்று நாம் அறிகிறோம்'' என்பார்.

கிறிஸ்துவையும் ஞானஸ்நானத்தையும் பிரிக்க முடியாது.

இயேசு ஞானஸ்நானம் பெற்றார் (மத். 3:13-17). அவர், ஞானஸ்நானத்தைக் கட்டளையிட்டார் (மத். 28:19; மாற். 16:16). ஞானஸ்நானம் என்பது அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலின் சாயலாக உள்ளது (ரோமர் 6:3-6). நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகின்றோம் (கலா. 3:26, 27). நீங்களும் நானும் முழுமையாக "கிறிஸ்துவைப் பிரசங்கிக்க" வேண்டுமென்றால் ஞானஸ்நானத்தின் அவசிய மும் நமது செய்தியின் ஒரு பாகமாக இருக்க வேண்டும்.[5]

## முடிவுரை

கிறிஸ்துவை அறிவித்தல் என்பதன் பொருள் என்ன என்று நாம் கண்டோம். கிறிஸ்துவைப் பிரசங்கித்தல் என்பதில் அவரது நபர்த்துவத்தைச் சுற்றியுள்ள மாபெரும் சத்தியங்கள் மட்டு மல்லாது, அதில், ராஜ்யம்/சபை, அவருடைய நாமம், ஞானஸ் நானம் ஆகியவற்றைப் பிரசங்கித்தலும் அடங்கியுள்ளன. மற்ற தலைப்புக்களையும் குறிப்பிடலாம், ஆனால் "கிறிஸ்துவைப் பிரசங்கித்தல்" என்பது எவ்வளவு பரந்து உயர்ந்தது என்பதைக் குறிப்பிட இவைகள் போதுமானவைகளாயுள்ளன.

சிலர் "கிறிஸ்துவைப் பிரசங்கித்தல்" என்பதற்குக் கையாளும் வழியை, நான் ஒரு சபையைப் பற்றிப் படித்த விஷயத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். இந்த சபையானது அதன் கட்டிடத்தில் பின்கண்டவாறு விளம்பரப்படுத்தியிருந்தது: ''நாங்கள் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்." சில நாட்களுக்குப் பிறகு சபையின் உறுப்பினர்கள் சிலர் இரத்தப்பலி என்ற கருத்தைப்பற்றிச் சங்கடமடைந்ததால் ''சிலுவையி லறையப்பட்ட" என்ற வார்த்தை அதிலிருந்து அழிக்கப்பட்டது, பிறகு அவ்விளம்பரத்தில் "நாங்கள் கிறிஸ்துவைப் பிரசங்கிக் கிறோம்" என்று காணப்பட்டது. விரைவில் ஒரு புதிய பிரசங் கியார் வந்து சேர்ந்தார்; அவர் இயேசுவின் வரலாற்றைவிட நடப்புச் சம்பவங்களில் அதிக அக்கறையுடையவராயிருந்தார், எனவே "கிறிஸ்துவை" என்ற வார்த்தை அழிக்கப்பட்டது. பிறகு அவ்விளம்பரமானது ''நாங்கள் பிரசங்கிக்கிறோம்'' என்று காணப்பட்டது. இறுதியாக சபையானது, மக்களையடையப் பிரசங்கிப்பது வழியாக இருக்க முடியாது என்று தீர்மானிக்கவே, ''பிரசங்கிக்கிறோம்'' என்ற வார்த்தையும் அழிக்கப்பட்டது.

*அவர்கள் நாடகங்களையும், இசை நிகழ்ச்சிகளையும் நடத்த ஆரம்பித்தனர். பிறகு அவ்விளம்பரத்தில் "நாங்கள்" என்ற வார்த்தை மட்டுமே காணப்பட்டது. நாம் எப்பொழுதும் "கிறிஸ்துவை, சிலுவையிலறையப்பட்ட அவரையே பிரசங்கித்தல்" என்பதன் முழுமையில் இருந்து விலகாதபடிக்குத் தேவன் நமக்கு உதவி செய்வாராக!*

*நாம் விவாதிக்கும் இப்பாடத்தின் தலைப்புகள் யாவும் நெருங்கிய தொடர்புடையவையாகும் - ஏனெனில், நாம் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறும்போது, தேவன் நம்மை, கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொண்டுள்ள இராஜ்யம்/சபையில் நம்மைச் சேர்த்துக் கொள்கிறார் (2:38, 41, 47; கொலோ. 1:13; ரோமர் 16:16). தேவன் உங்களை அவரது இராஜ்யம்/சபையில் சேர்த்துக் கொள்ளும்படியாக நீங்கள் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற விரும்புகிறீர்களா? வசனம் 12ஐ மறுபடியும் கவனியுங்கள்: "தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்." அவர்கள் விசுவாசித்தபோது கீழ்ப்படிந்தார்கள்! அவர்கள் காத்திருக்கவில்லை; அவர்கள் தயங்கவில்லை; அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்பினாரோ அதைச் செய்தனர்![6] நீங்களும் அதையே செய்ய மாட்டீர்களா?*

## காட்சி-உதவிக் குறிப்புகள்

*"நாங்கள் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்" என்ற வார்த்தைகள் காணும்படியாக எழுதப்படலாம். இதைக் கரும்பலகையில் எழுதி ஒவ்வொரு வார்த்தையாக அழியுங்கள். (ஒரு பிரசங்கியார் இவ்வார்த்தைகளை ஒளிப்படக் கருவியின் பிலிம்மில் எழுதி ஒவ்வொரு வரியிலும் ஒரு வார்த்தை இருக்கும்படி செய்து, ஒவ்வொரு வார்த்தை ஒவ்வொரு தடவையில் அழியும்படியாக காட்டி விளக்கினார்.)*

*தகுதியானதாயிருக்குமென்றால், முன்னோடிப் பிரசங்*

கியார்கள் பயன்படுத்திய வழியில் நீங்களும், கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதில் ஞானஸ்நானத்தைப் போதிப்பதும் அடங்கி யுள்ளது என்பதைக் காட்ட ஒரு சிறுவனை கல் ஒன்று எடுத்து வரும்படி அனுப்பலாம்.

## ❦ பிரசங்கக் குறிப்புகள் ❦

பர்ட்டன் காஃப்மன் அவர்கள் தமது, "நடபடிகளின் விளக்கம்" (James Burton Coffman, *Commentary on Acts* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1976], 159-61). என்ற நூலில் "கிறிஸ்துவைப் பிரசங்கிப்பது என்பதன் பொருள் என்ன" என்பதற்கு ஏராளமான குறிப்புகள் அளித்துள்ளார். மேலும் அவர் *The Gospel in Gotham* ([New York: By the Author, n.d.], 217-24) என்ற கருத்தில் ஒரு பிரசங்கமும் செய்துள்ளார்.

---

குறிப்புகள்

[1]ஆங்கிலத்தில் இது சில சமயங்களில் "Sigmund" என்று உச்சரிக்கப்படுகிறது. Syngman Rhee அவர்கள் கொரியாவின் மாபெரும் தலைவர் ஆவார். [2]1 கொரி. 1:23, 24; 2:2; கலா. 6:14 ஆகியவற்றைக் காணவும். [3]சமாரியர்கள் (அவர்கள் ஏற்றுக் கொண்ட) நியாயப்பிரமாணத்தின் ஐந்து நூல்களிலிருந்து மோசேயைப் போன்ற ஒரு தீர்க்கசரிசி உலகத்திற்கு வரவிருந்தார் என்று அறிந்திருந்தனர் (உபா. 18:15, 18, 19). தீர்க்கதரிசிகள் அபிஷேகம் செய்யப்பட்டதால், யூத சொற்றொடரான "மேசியா" ("அபிஷேகம் பண்ணப்பட்டவர்") என்பதை சமாரியர்கள் இயல்பா கவே,மேசியாவைப் பற்றிய மற்ற சில யூதக் கருத்துக்களுடன் தகுதியானதென ஏற்றுக் கொண்டிருந்தனர். [4]மத். 16:18, 19ல் "ராஜ்யம்" மற்றும் "சபை" என்ற வார்த்தைகள் ஒன்றுக்குப்பதில் ஒன்று பயன்படத் தக்க வகையில் இருப்பதைக் கவனியுங்கள். "எல்லாக் காலங்களிலும், சபை மற்றும் இராஜ்யம் என்பது தேவனால் நிறுவப்பட்ட ஒரே அமைப்பையே குறிக்கிறது என்பதைப் பழமைவாத மற்றும் பகுத்தறிவுவாதக் கல்வியாளர்கள் யாவரும் ஒரே கண்ணோட்டத்துடன் நோக்கியிருக்கின்றனர்" (காஃப்மன், 157). [5]மந்திரியின் மனமாற்றம் என்ற அடுத்த பாடத்தில் இக்கருத்து இன்னும் அதிகமாய் விவரிக்கப்பட்டுள்ளது. [6]மத். 6:33; எபி. 4:7; 2 கொரி. 6:2; பிர. 12:1 ஆகியவைகளைக் கவனிக்கவும்.